21st March 1963]

திரு. எம். எஸ். மணி : இங்கே உற்பத்தியாகிற சைக்கிள்களுக்கு விளம்பரம் செய்வதற்காக ஒவ்வொரு சட்டசபை உறுப்பினர்களுக்கும் ஒவ்வொரு சைக்கிள் இனுமாக வழங்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: நாளைக்கு இந்த யூனிட் நஷ்டத்தில் வேலை செய்கிறதாக சொல்லாமல் இருந்தால் அப்படிக் கொடுக்கலாம். அப்படிக் கொடுத்தாலும் அது சலுகை என்ற குற்றமாக வரக்கூடும்.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, சைக்கிள்களுடைய விலை 25 ரூபாய் குறைவு என்று சொன்னுல், நாம் செய்கின்ற நேரத்திலே மற்ற இடங்களில் இருப்பதைவிட குறைவா, அல்லது வாங்குகின்ற மக்களுக்கு 25 ரூபாய் குறைவா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : " செல்லிங் பிரைசிலே " 25 ரூபாய் குறைவு.

திரு. டி. கார்ச்சா கவுடர் : இவ்விதமான சிறு தொழில்களை ஆரம்பிக்கும்போது பின் தங்கிய நீலகிரி மாவட்டத்தில் இத்தகைய தொழில்களை ஆரம்பிக்க அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதைப்பற்றி டிமாண்டில் பேசுங்கள்.

Alleged beating of perason (Vyasarpadi Police Station)

* 319 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have received any complaint from any person alleging severe beating and ill-treatment by the Vyasarpadi Police on 26th January 1963; and

(*b*) if so, the action take on it?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) A writ petition was filed in the Madras High Court on behalf of one David of Vyasarpadi, Madras City, alleging severe beating by the Vyasarpadi Police Officials while he was in their custody, seeking an order of release from police custody under Section 391 (1) Cr.P.C. The High Court, while disposing of the writ petition, directed the Chief Presidency Magistrate to make an enquiry into the incident. He has since taken up the enquiry, which is now in progress. Apart from this, no representation was received by the Government on the incident.

திரு. எஸ். மாதவன் : தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத் தீர்ப்பிலே, " டேவிட் என்ற நபரை ரிமாண்ட் செய்த கமிஷனர் சட்டப்படி நடக்கவில்லை " என்று கூறப்பட்டிருப்பது உண்மையா ? அதன் பேரில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தத் தீர்ப்பின்படி சீப் பிரசிடென்சி மாஜிஸ்ட்ரேட் விசாரணை நடத்துகிறுர். விசாரணை முடிந்த பிறகு மேலும் விவரங்கள் கூற முடியும்.

திரு. எஸ். மாதவன் : தலைவர் அவர்களே, சட்டத்தை நிலைநாட்டுவதற்கு இருக்கும் போலீஸ் துறையினரிடத்திலேயே நீதி மன்றப் பணியையும் கொடுத்திருக்கும் ஒரே காரணத்தால்தான் இது போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன என்பதை உணர்ந்து நீதித் துறைப் பணியை அவர்களிடமிருந்து எடுத்துவிட அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் அவர்கள் வழக் கறிஞர். ஹைகோர்ட்டில் தீர்ப்பு கூறப்பட்டது. அவர்கள் தெரிவித்த கருத் துப்படி சீப் பிரசிடென்சி மாஜிஸ்ட்ரேட் விசாரிக்கிறார். அந்த விசாரணை முடிந்த பிறகு மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

முந்திரித் தொழிற்சாலை (விருத்தாசலம்)

* 320 கேள்வி.—**திரு. கி. நாராயணசாமி பிள்ளை :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விருத்தாசலத்தில் முந்திரி தொழிற்சாலை ஒன்று அமைக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அரசாங்கம் நிறுவும் உத்தேசம் இல்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : தஞ்சை ஜில்லாவில் முந்திரிச் சாகுபடி அதிகமாக இருக்கும் காரணத்தால் அங்கு ஒரு முந்திரி தொழிற்சாலையை அமைக்க அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முந்திரித் தொழிற்சாலையை ஆரம்பிகக வேண்டுமென்ற ஆலோசனை இல்லை.

Additional Sub-Court, Erode

* 321 *Q.*—SRIMATHI PARVATHI ARJUNAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have been consulted by the High Court for opening an Additional Sub-Court at Erode in view of large volume of work there;

(*b*) if so, what advice has been given;

(*c*) whether the Government have received any representation from Erode Bar to open additional Sub-Court to cope up with the large volume of work at Erode : and

(*d*) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise.

(*c*) & (*d*) Yes. A representation, dated 14th February 1963 from the Bar Association, Erode, has since been received. The High Court has been consulted in the matter, and its remarks are awaited.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, திருப்பத்தூரில் ஒரு கோர்ட் இருந்தது. இப்போது ராணிப்பேட்டைக்குச் சென்று வரவேண்டி யிருக்கிறது. அதை மாற்றியமைக்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சப்–டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டு களை ஏற்படுத்துவதுபற்றியும், மாற்றுவது பற்றியும் ஹைகோர்ட்டுடன் ஆலோசனை செய்து அப்போதைக்கப்போது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் பட்டு வருகிறது.

திரு. மு. பொ. வடிவேலு : வட ஆற்காடு மாவட்டத்தில் திருப்பத்தூர் வட்டத்தில் ஒரு சப்–கோர்ட் வைக்க ஹைகோர்ட் சிபாரிசு செய்திருக்கிறது என்று அறிகிறேன். அரசாங்கம் அதற்கு அனுமதி கொடுத்திருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : புதிதாகக் கோர்ட் வேண்டுமென்றால் அதைப்பற்றி இப்போது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள முடியாது.